# ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# பிள்ளை லோகாசார்யர்

பிள்ளை லோகா சார்யர் என்னும் ஆசார் யர்அவரே
புள்ளை ஊரும் அரங்கனைக் காத்த பெருமைக் குரியவராம்!
பெருமைக் குரியவராம்!
வள்ளல் வடக்குத் திருவீ திப்பிள்ளை தமக்குத் திருமகனாய்
அள்ளக் குறையா ஆனந் தம்தர அவதரித் தவர்அவரே!
அவதரித் தவர்அவரே!
- (பிள்ளை)

வடக்குத் திருவீ திப்பிள் ளைக்கு நம்பிள் ளைஅருளால்
அடஅக் குரோதன, ஐப்பசி, ஓணத்து ஒளிர்ந்த மணிஅவரே!
ஒளிர்ந்த மணிஅவரே!
படப்பாம் பணையோன் அரங்கன், அழகிய மணவா ளன்அருளால்
கிடைத்தவ ரேஅழ கியமண வாளப் பெருமாள் எனும்இளவல்!
பெருமாள் எனும்இளவல்!
- (பிள்ளை)

குருநம் பிள்ளையின் அருளா லேதிரு அவதா ரம்செய்த
பெருமையி னால்பிள்ளை உலகார் யர்எனத் திருநா மம்பெற்றார்!
திருநா மம்பெற்றார்!
திருக்கச்சி வரதனின் அம்சமாம் பிள்ளை உலகார் யர்அவரும்
திருவரங் கேசனுக் காகவே வாழ்ந்த தியாகச் செம்மலவர்!
தியாகச் செம்மலவர்!
- (பிள்ளை)

அருக்கனைப் போலே 'அஷ்டா தச ரகசியம்' அருளிட்டு
இருளைப் போக்கி உலகத் தோர்க்கொளி விளக்கா னார்அவரே!
விளக்கா னார்அவரே!
குருபரம் பரையில் வடக்குத் திருவீ திப்பிள் ளைதமக்கும்
திருவாய் மொழியின் பிள்ளைக்கும் இடையே ஒளிரும் சுடர்அவரே!
ஒளிரும் சுடர்அவரே!
- (பிள்ளை)

திருவரங் கத்துச் செல்வம் களவிட மிலேச்சர்கள் படையோடு
வருதல் அறிந்தே கருவறைக் குக்கல் திரையிட் டார்அவரே!
திரையிட் டார்அவரே!
ஒருநொடி கூடத் தாமதி யாது உத்ஸவ மூர்த்திகளை
ஒருபல் லக்கில் ஏற்றியே விரைந்தார் அரங்க நகர்விட்டே!
அரங்க நகர்விட்டே! - (பிள்ளை)

தென்திசை செல்கையில் கொள்ளையர் தம்மிடம் பொன்,பொருள் இழந்திட்டும்
திண்ணிய மனதுடன் பயணம் தொடர்ந்தார் வனத்திடை யேஅவரும்!
வனத்திடை யேஅவரும்!
தண்திரு மோகூர், மாலிருஞ் சோலை இவற்றின் அருகமைந்த
இன்ஜோ திஷ்குடி வனத்தரங் கேசனை எழுந்தரு ளச்செய்தார்!
எழுந்தரு ளச்செய்தார்!
- (பிள்ளை)

உலக நாயகன், உத்தமன், அரங்கன் நிலைக்காய் வருந்திட்டே
புலம்பிட் டவனில் வியர்வை கண்டே விசிறிட நியமித்தார்!
விசிறிட நியமித்தார்!
அலகில் விளையாட் டுடையான் அவர்க்கும் அவருடைத் தொடர்புடைய
பலர்க்கும் மோட்சம் அருளிட உகந்தார் பிள்ளை உலகார்யர்!
பிள்ளை உலகார்யர்!
- (பிள்ளை)

அந்தப் பகுதியில் தம்முடைக் கண்கள் காணும் செடி,கொடிகள்,
ஐந்துக் கள்என அனைத்தும் மோட்சம் பெறவழி உடன்செய்தார்!
பெறவழி உடன்செய்தார்!
"நந்தகு மாரா! நான்தொழும் அரங்கா!" எனவிழி நீர்பெருக்கி
அந்தக் கணத்தே தமதா சார்யர் திருவடி செலவிழைந்தார்!
திருவடி செலவிழைந்தார்!
- (பிள்ளை)

குருவடக் குத்திரு வீதிப் பிள்ளையின் திருவடி கள்தம்மை
திருஉள் ளத்தே தியானம் செய்தவர் திருநா டேகிட்டார்!
திருநா டேகிட்டார்!
ஒருநூற் றிருபது அகவையில் அக்ஷய, ஆனித் திங்கள்வளர்
திருப்பிறை துவாதசி யதுவே அவரது தீர்த்த தினமாகும்!
தீர்த்த தினமாகும்!
- (பிள்ளை)

அரும்பெரும் நூல்கள், சீடர்கள் கொண்டே வைணவம் வளர்த்திட்ட
ஒருவர் நிகரில் உயரிய குருவே பிள்ளை உலகார்யர்!
பிள்ளை உலகார்யர்!
குருஅவர் தம்மைப் போற்றித் தொழுவதே திவ்விய தம்பதிகள்
பெருமகிழ் வோடு உகக்கும் செயலாம் அறிவீர் உலகத்தீர்!
அறிவீர் உலகத்தீர்!
- (பிள்ளை)

ஜோதிஷ்குடி
விஜய,ஐப்பசித்திருவோணம்.
10-11-2013.

அடியேன்,
ரங்கநாத ராமானுஜதாசன்
(அந்தாதிக் கவிஞர் ஆர்.வீ.ஸ்வாமி)